தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.234/ந/2025 மற்றும் 51/ந/2026, நாள் 24.07.2026

D.செந்தில்,
திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திண்டிவனம் நகராட்சி, விழுப்புரம் மாவட்டம். – எதிர்மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், நேருவீதி, கதவு எண்.126 A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D. செந்தில் என்பவரது 28.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.03.2025 அன்று பெறப்பட்டு 234/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், நேருவீதி, கதவு எண்.126 A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. D. செந்தில் என்பவரின் 28.03.2025 நாளிட்ட மனுக்களில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" 1) மேற்படி முகவரியில் வசித்து வரும் நான் மனுதாரர் ஆவேன்.

2) மேற்படி முகவரியில் உள்ள சொத்தானது 621 சதுர அடி ஆகும். இந்த சொத்தானது எனது தாயார் பெயரில் இருந்தது. மேற்படி சதுர அடி இடத்தில் கீழே கடையும், மேலே வீடும் உள்ளது. இந்த சொத்திற்கான திண்டிவனம் நகராட்சி சொத்துவரி விதிப்பு எண்களும் எனது தாயார் பெயரில் இருந்தது. இந்த சொத்தானது எனது! தந்தையார் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டது. அதன் பிறகு இந்த சொத்து எனது தந்தையார் எனக்கு 8.02.2007–ல் எழுதிக் கொடுத்த சொத்தாகும். இதற்கு ஆதாரமாக – தான செட்டில்மெண்ட் பத்திரம், வில்லங்க சான்றிதழ் இம்மனுவில் 1, 2 இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன்.

3) மேற்படி சொத்திற்கு திண்டிவனம் மண்டல துணை வட்டாட்சியரிடம் எனது பெயரில் கூட்டு பட்டா பெற்று அனுபவித்து வருகிறேன். அதற்கு ஆதாரமாக கூட்டு பட்டாவை இம்மனுவில் 3–வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன்.

4) மேற்படி கடைக்கும், வீட்டிற்கும் சொத்து வரி விதிப்பு எண்கள் எனது தாயார் பெயரில் இருந்தது என்பதற்கும், கடந்த 2020ஆம் ஆண்டு வரை சொத்து வரி பாக்கி செலுத்தப்பட்டது என்பதற்கும் ஆதாரமாக சொத்துவரி செலுத்திய ரசீதுகளை இம்மனுவில் 4–வது இணைப்பாக இணைத்துள்ளேன்.

5) மேற்படி சொத்து வரி விதிப்பு எண்கள் இருந்த எனது தாயார் கடந்த 30.09.2021 அன்று இறந்துவிட்டார். அதன் பிறகு மேற்படி சொத்து வரி பெயர் மாற்றம் – எனது பெயரில் கடந்த 25.10.2021 அன்று திண்டிவனம் நகராட்சியால் மாற்றப்பட்டது. இதற்கு ஆதாரமாக எனது தாயாரின் இறப்பு சான்றிதழ், எனது பெயரில் சொத்துவரி மாற்றம் உத்தரவு ஆகிய ஆதாரங்களை இம்மனுவில் 5, 6 இணைப்பாக இணைத்துள்ளேன்.

6) மேற்படி சொத்து வரி எனது பெயருக்கு மாற்றப்பட்ட பிறகு எனது கடைக்கும் வீட்டிற்கும் சொத்துவரி பாக்கி 2024–2025 ஆம் நிதியாண்டு வரை அட்வான்ஸ் ஆக சொத்துவரி செலுத்தி விட்டேன் என்பதற்கு ஆதாரமாக சொத்துவரி ரசீதுகளை இம்மனுவில் 8–வது இணைப்பில் இணைத்துள்ளேன்.

7) இவ்வாறான சூழ்நிலையில், எதிர்மனுதாரர் கடந்த 05.03.2024ஆம் தேதி இரண்டு ஜப்தி அறிவிப்புகளை அனுப்பி வைத்தார். அந்த ஜப்தி அறிவிப்புகளை இம்மனுதாரர் பார்த்தபோது மறைந்த எனது தாயார் பெயரில் புதிய/பழைய வரி விதிப்பு எண்.043/019/900968–043/013/00658–ற்கு வரி பாக்கி தொகை ரூ.77,490/– (2017–2018 முதல் 2023–2024 நிதியாண்டு) உள்ளது என்பதையும் புதிய/பழைய வரிவிதிப்பு எண்.043/019/900968–043/013/00657–ற்கு வரி பாக்கி தொகை ரூ.26,622/– (2017–2018 முதல் 2023–2024 நிதியாண்டு) உள்ளது என்பதையும் பார்க்க முடிந்தது. இதனை நான் முற்றிலும் மறுக்கிறேன். ஏனெனில் எதிர்மனுதாரர் அனுப்பிய ஜப்தி அறிவிப்புகளில் உள்ள வரி விதிப்பு எண்களும் ஏற்கனவே அதே சொத்திற்கு எனது பெயரில் உள்ள வரி விதிப்பு எண்களும் ஒரே சொத்திற்கு மற்றும் ஒரே கதவு எண்ணிற்கு விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விதிக்க முடியாது, என்பதற்கு ஆதாரமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ந.க.எண்.1708/2022/அ2/நாள் 30.04.2022ஆம் தேதியிட்ட கடிதம் குறிப்பிடுகிறது. இப்பத்திக்கு ஆதாரமாக உள்ள அத்தாட்சிகளை இம்மனுவில் 7,9–வது இணைப்பில் இணைத்துள்ளேன்.

8) மேற்படி எதிர்மனுதாரர் அனுப்பிய இரண்டு ஜப்தி அறிவிப்புகளுக்கும் பதில் அறிவிப்பை கடந்த 19.02.2025ஆம் தேதி அனுப்பியதோடு, பதில் அறிவிப்பில் ஜப்தி அறிவிப்பை நீக்கரவு செய்து அதில் குறிப்பிட்டுள்ள வரி விதிப்பு எண்களை தமிழ்நாடு நகராட்சி துறை வெப்சைட்டில் இருந்து நீக்கம் செய்திட வேண்டும் என்று எதிர் கோரிக்கை வைத்திருந்தேன். ஆனால் எதிர்மனுதாரர் ஒரு சொத்திற்கு இரண்டு வரி விதித்தது தவறு என்று தெரிந்தும் இன்று வரை அதனை சரி செய்யவில்லை என்பதற்கு ஆதாரமாக இம்மனுவில் 10,11–வது இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள அத்தாட்சிகளை பரிசீலிக்கும் போது தெரியும்.

9) மேலும், மனுதாரர் இது தொடர்பாக கடந்த 03.03.2025 ஆம் தேதி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் மூலமாக எதிர்மனுதாரருக்கு குறைதீர்க்கும் மனு சார்வு செய்து ஒப்புகையும் பெறப்பட்டுள்ளது. ஆதாரத்திற்கு இம்மனுவில் 12–வது இணைப்பில் இணைத்துள்ளேன். ஆனால் இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சமூகம் அவர்கள் இம்மனுவை கருணையோடு ஏற்று ஆவணங்களை பரிசீலனை செய்து ஒரு சொத்திற்கு இரண்டு வரி விதித்த சீர் கேடான நிர்வாகத்தை நடத்தி வரும் திண்டிவனம் நகராட்சி ஆணையாளரை அழைத்து விசாரணை செய்து எதிர்மனுதாரர் அனுப்பிய ஜப்தி அறிவிப்புகளை ரத்து செய்யவும், கனம் முறைமன்ற நடுவர் அவர்கள் உத்தேசிக்கும் நஷ்ட ஈட்டினை மனுதாரருக்கு வழங்க உத்தரவிடுமாறு இம்மனுவை பணிந்து சமர்ப்பிக்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீட்டு மனுமீதான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திண்டிவனம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. திண்டிவனம் நகராட்சி ஆணையரின் அறிக்கை எதுவும் பெறப்படவில்லை.

4. இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திண்டிவனம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 28.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.01.2026 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"1) மேற்படி விலாசத்தில் கீழ்தளத்தில் 621 சதுர அடி கொண்ட கடையும், மேல் தளத்தில் வீடும் உள்ளது. மேற்படி வீடு எனது தாயார் எனது தந்தை திரு. B. தட்சணாமூர்த்திக்கு எழுதிக் கொடுத்த, மேற்படி கடையுடன் கூடிய வீடு. எனது தந்தை 08.02.2007–ல் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார்.

2) 2020–ம் ஆண்டு வரை எனது தாயார் D.கஸ்தூரி பெயரில் இருந்த மேற்படி கடைக்கும், வீட்டிற்கும் சொத்துவரி செலுத்திவந்த நிலையில் மேற்படி சொத்துவரியினை எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. எனது தாயார் பெயரில் உள்ள புதிய/பழைய வரிவிதிப்பு எண். எண்.043/019/900968–043/013/00658–க்கு வரி பாக்கி தொகை ரூ.77,490/– (2017–2018 முதல் 2023–2024 நிதியாண்டு) உள்ளது என்றும் புதிய/பழைய வரிவிதிப்பு எண்.043/019/900968–043/013/00657–க்கு வரி பாக்கித் தொகை ரூ.26622/– (2017–2018 முதல் 2023–2024 நிதியாண்டு) உள்ளது என திண்டிவனம் நகராட்சி ஆணையரின் 05.03.2024 நாளிட்ட ஜப்தி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) திண்டிவனம் நகராட்சி ஆணையரின் ஜப்தி அறிவிப்பில் உள்ள வரிவிதிப்பு எண்களும் ஏற்கனவே அதே சொத்திற்கு எனது பெயரில் உள்ள வரிவிதிப்பு எண்களும் ஒரே சொத்து மற்றும் ஒரே கதவு எண்ணிற்கு விதிக்கப்பட்டுள்ளதாகும் என 19.02.2025 அன்று பதில் அளித்துள்ளேன். மேலும், இச்சொத்துவரி தொடர்பாக திண்டிவனம் நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை நீக்கம் செய்திடுமாறு கேட்டுக்கொண்டுள்ளேன்.

4) ஒரு சொத்திற்கு இரண்டு வரி விதித்தது தவறு என தெரிந்தும் திண்டிவனம் நகராட்சி ஆணையர் அதனை சரி செய்யவில்லை என்பதால் மேற்படி ஜப்தி அறிவிப்புகளை ரத்து செய்திட ஆவண செய்திடுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்."

6. திண்டிவனம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.152/2025/அ–2, நாள் 23.01.2026–ல் திண்டிவனம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளுக்கு 28.01.2026 அன்று ஆணையரால் பொது ஏலம் நடத்தப்படவுள்ளதால், 28.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு திண்டிவனம் நகராட்சி மேலாளர் திரு. தி. நெடுமாறன் என்பவர் ஆஜராவார் என தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, திண்டிவனம் நகராட்சி மேலாளர் திரு. தி. நெடுமாறன் என்பவர் 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதில் –

"மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19, நேரு வீதி, கதவு எண்.126 A மற்றும் 126 A1ஆகிய கட்டிடங்களுக்கு அன்னாரின் தாயார் திருமதி. கஸ்தூரி பெயரிலிருந்து திரு. செந்தில் என்ற பெயருக்கு மாற்றம் செய்து வரி செலுத்தி வருவதாகவும் மேலும் 2 கூடுதல் வரி விதிப்புகள் கஸ்தூரி பெயரிலேயே தவறுதலாக அதே கட்டிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டு அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டிடங்களை நேராய்வு செய்து உரிய விதிகளின்படி வரிவிதிப்பினை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள 10 தினங்கள் அவகாசம் வழங்கும்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்

முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்." என தெரிவித்துள்ளார்.

மேலும், விசாரணையின் போது நகராட்சி மேலாளர் தாக்கல் செய்த திண்டிவனம் நகராட்சி ஆணையரின் 23.01.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.152/2025/அ2–ல் மனுதாரரின் முறையீட்டு மனு குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.	மனுதாரர் பெயர் மற்றும் முகவரி	திரு. D. செந்தில், எண்.126 A/1, நேருவீதி, திண்டிவனம்.
2.	மேற்படி முகவரியில் உள்ள சொத்தானது 621 சதுர அடி ஆகும். இந்த சொத்தானது எனது தாயார் பெயரில் இருந்தது. மேற்படி சதுர அடி இடத்தில் கீழ் கடையும், மேலே வீடும் உள்ளது. இந்த சொத்திற்கான திண்டிவனம் நகராட்சி சொத்துவரி விதிப்பு எண்களும் எனது தாயார் பெயரில் இருந்தது. இந்த சொத்தானது எனது தந்தையார் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டது. அதன் பிறகு இந்த சொத்து எனது தந்தையார் எனக்கு B2 2007–ல் எழுதிக் கொடுத்த சொத்தாகும். இதற்கு ஆதாரமாக தானசெட்டில் மெண்ட் பத்திரம், வில்லங்க சான்றிதழ் இம்மனுவில் 1, 2 இணைப்பு ஆவணமாக வைத்துள்ளேன்.	கேள்வி எழவில்லை
3.	மேற்படி சொத்திற்கு திண்டிவனம் மண்டல துணை வட்டாட்சியரிடம் எனது பெயரில் கூட்டு பட்டா பெற்று அனுபவித்து வருகிறேன். அதற்கு ஆதாரமாக கூட்டு பட்டாவை இம்மனுவில் 3–வது இணைப்பு ஆவணமாக இணைத்துள்ளேன்.	கேள்வி எழவில்லை
4.	மேற்படி கடைக்கும் வீட்டிற்கும் சொத்து வரி விதிப்பு எண்கள் எனது தாயார் பெயரில் இருந்தது என்பதற்கும், கடந்த 2020–ஆம் ஆண்டு வரை சொத்து வரி பாக்கி செலுத்தப்பட்டது. என்பதற்கும் ஆதாரமாக சொத்துவரி செலுத்திய ரசீதுகளை இம்மனுவில் 4–வது இணைப்பாக இணைத்துள்ளேன்.	கேள்வி எழவில்லை
5.	மேற்படி சொத்து வரி விதிப்பு எண்கள் இருந்த எனது தாயார் கடந்த 30.09.2021 அன்று இறந்துவிட்டார். அதன் பிறகு மேற்படி சொத்து வரி பெயர் மாற்றம் எனது பெயரில் கடந்த 25.10.2021 ஆம் ஆண்டு திண்டிவனம் நகராட்சியால் மாற்றப்பட்டது. இதற்கு ஆதாரமாக எனது தாயாரின் இறப்பு சான்றிதழ், எனது பெயரில் சொத்துவரி மாற்றம் உத்தரவு ஆகிய ஆதாரங்களை இம்மனுவில் 5, 6 இணைப்பாக இணைத்துள்ளேன்.	கேள்வி எழவில்லை

6.	மேற்படி சொத்து வரி எனது பெயருக்கு மாற்றப்பட்ட பிறகு, எனது கடைக்கும், வீட்டிற்கும் சொத்துவரி பாக்கி 20.04.2025 ஆம் நிதியாண்டு வரை அட்வான்ஸ் ஆக சொத்துவரி செலுத்தி விட்டேன் என்பதற்கு ஆதாரமாக சொத்து வரி ரசீதுகளை இம்மனுவில் 8–வது இணைப்பில் இணைத்துள்ளேன்.	கேள்வி எழவில்லை
7.	இவ்வாறான சூழ்நிலையில் எதிர்மனுதாரர் கடந்த 5.03.2024ஆம் தேதி இரண்டு ஜப்தி அறிவிப்புகளை அனுப்பி வைத்தார். அந்த ஜப்தி அறிவிப்புகளை பார்த்தபோது மறைந்த எனது தாயார் பெயரில் புதிய/பழைய வரி விதிப்பு எண்.043/019/900968–043/013/00658–ற்கு வரி பாக்கி தொகை ரூ.77,490/– (2017–2018 முதல் 2023–2024 நிதியாண்டு வரை) உள்ளது என்பதையும் புதிய வரிவிதிப்பு எண்.043/019/900968–043/013/00658–ற்கு வரி பாக்கி தொகை ரூ.26,622/– (2017–2018 முதல் 2023–2024 நிதியாண்டு வரை) உள்ளது என்பதையும் பார்க்க முடிந்தது. இதனை நான் முற்றிலும் மறுக்கிறேன். ஏனெனில்? எதிர்மனுதாரர் அனுப்பிய ஜப்தி அறிவிப்புகளில் உள்ள வரி விதிப்பு எண்களும் ஏற்கனவே அதே சொத்திற்கு எனது பெயரில் உள்ள வரி விதிப்பு எண்களும் ஒரே சொத்திற்கு மற்றும் ஒரே கதவு எண்ணிற்கு விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விதிக்க முடியாது, என்பதற்கு ஆதாரமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ந.க.எண்.1708/2022/12, நாள் 30.04.2022 ஆம் தேதியிட்ட கடிதம் குறிப்பிடுகிறது. இப்பத்திற்கு ஆதாரமாக உள்ள அத்தாட்சிகளை இம்மனுவில் 7,9–வது இணைப்பில் இணைத்துள்ளேன்.	திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட எண்.19–ல் நேருவீதியில் கதவு எண்.126 A/1–க்கு சொத்துவரி எண் 1. 043/019/900968 (043/013/00658) 2. 043/019/900946 (043/013/00657)க்கு திருமதி. கஸ்தூரி என்பவர் பெயரில் சொத்துவரி உள்ளது. மேற்படி சொத்துவரி வரிசை எண்.1–க்கு 2017–2018 முதல் 2023–2024–ம் ஆண்டு வரை ரூ.77490/– நிலுவை உள்ளது. சொத்துவரி வரிசை எண். 2–க்கு 2017–18 முதல் 2023–24–ம் ஆண்டு வரை ரூ.26622/– நிலுவை உள்ளது. சொத்துவரி இந்நிலையில் அன்னார் தெரிவித்துள்ள சொத்துவரி விதிப்பு கட்டிடம் இரண்டு விதமான பயன்பாட்டில் (வணிகம் மற்றும் குடியிருப்பு) உள்ளதால் இரண்டு சொத்துவரிகள் அப்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
8.	மேற்படி எதிர் மனுதாரர் அனுப்பிய இரண்டு ஜப்தி அறிவிப்புகளுக்கும் பதில் அறிவிப்பை கடந்த 19.02.2025ல் அனுப்பியதோடு, பதில் அறிவிப்பில் ஜப்தி அறிவிப்பை நீக்கரவு செய்து அதில் குறிப்பிட்டுள்ள வரி விதிப்பு எண்களை தமிழ்நாடு நகராட்சி துறை வெப்சைட்டில் இருந்து நீக்கம் செய்திட வேண்டும் என்று எதிர் கோரிக்கை வைத்திருந்தேன். ஆனால் எதிர்மனுதாரர் ஒரு சொத்திற்கு இரண்டு வரி விதித்தது தவறு என்று தெரிந்தும் இன்று வரை அதனை சரி செய்யவில்லை என்பதற்கு ஆதாரமாக இம்மனுவில் 10, 11–வது இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள அத்தாட்சிகளை பரிசீலிக்கும் போது தெரியும்.	சொத்துவரிவிதிப்புதாரர் இறந்து விட்டார் என்பதால் உரிய இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவை உரிய விவரத்துடன் நாளது தேதி வரையில் சொத்துவரி நிலுவையில்லாமல் செலுத்திய ரசீது இணைத்து விண்ணப்பித்திருந்தால் சொத்து வரி முழுமையாக பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

9.	மேலும் மனுதாரர் இது தொடர்பாக கடந்த 03.03.2025 ஆம் தேதி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் மூலமாக எதிர்மனுதாரருக்கு குறைதீர்க்கும் மனு சார்வு செய்து ஒப்புகையும் பெறப்பட்டுள்ளது. ஆதாரத்திற்கு இம்மனுவில் 12–வது இணைப்பில் இணைத்துள்ளேன். ஆனால் இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சமூகம் அவர்கள் இம்மனுவை கருணையோடு ஏற்று ஆவணங்களை பரிசீலனை செய்து ஒரு சொத்திற்கு இரண்டு வரி விதித்த சீர் கேடான நிர்வாகத்தை நடத்தி வரும் திண்டிவனம் நகராட்சி ஆணையாளரை அழைத்து விசாரணை செய்து எதிர்மனுதாரர் அனுப்பிய ஜப்தி அறிவிப்புகளை ரத்து செய்யவும், கனம் முறைமன்ற நடுவர் அவர்கள் உத்தேசிக்கும் நஷ்ட ஈட்டினை மனுதாரருக்கு வழங்க உத்தரவிடுமாறு இம்மனுவை பணிந்து சமர்ப்பிக்கிறேன்''	சொத்துவரி விண்ணப்பதாரர் நகராட்சி சொத்து கேட்பு அறிவிப்பில் கண்டுள்ளவாறு நிலுவையின்றி செலுத்தியவுடன் நிர்வாக ரீதியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. மேலும், எதிர்மனுதாரர் சார்பில் 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான திண்டிவனம் நகராட்சி மேலாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு திண்டிவனம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 152/2025/அ2, நாள் 12.02.2026–ல் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"திரு. D. செந்தில், திண்டிவனம், என்பவரின் 28.03.2025ம் நாளிட்ட முறையீட்டு சம்மந்தமாக 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் இந்நகராட்சி மேலாளரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு மனு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மனு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரிவான அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதின்படி, கீழ்கண்ட விவரப்படி அறிக்கை பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது. உதவி புகார்தாரர் திரு. D. செந்தில், திண்டிவனம், என்பவரின் இடத்தினை இந்நகராட்சி வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வர் மற்றும் சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர்ஆகியோரால் நேரடி ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்ட விவரப்படி அறிக்கைசமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உதவி புகார்தாரர் திரு. D. செந்தில், திண்டிவனம், என்பவரின் இடத்தினை இந்நகராட்சி வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வர் மற்றும் சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர்ஆகியோரால் நேரடி ஆய்வு செய்யபப்பட்டு கீழ்க்கண்ட விவரப்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தரைதளம் RCC	9 x 65 = 585 சதுர அடி	வணிக பயன்பாடு
முதல் தளம் RCC	9 x 65 = 585 சதுர அடி	குடியிருப்பு
இரண்டாம்தளம் RCC	9 x 17 = 153 சதுர அடி	குடியிருப்பு
இரண்டாம்தளம் (ACC)	9 x 12 = 108 சதுர அடி	குடியிருப்பு
ஆக மொத்தம்	1431 சதுர அடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.	

தற்போதுள்ள வரிவிதிப்புகள்

043/019/900968	திருமதி கஸ்தூரி	576 ச.அடி. குடியிருப்பு
043/019/900946	திருமதி கஸ்தூரி	480 ச.அடி. வணிகம்
043/019/900176	திரு. D. செந்தில்	720 ச.அடி வணிகம்
043/019/900177	திரு. D. செந்தில்	520 ச.அடி குடியிருப்பு

மேலும், வரி விதிப்பு எண். 043/109/900968 (2017–2018 முதலாம் அரையாண்டு முதல் புதியதாக வரி விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது.

வரி விதிப்பு எண். 043/109/900946 (2017–2018 முதலாம் அரையாண்டு முதல் புதியதாக வரி விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது.

பழைய வரி விதிப்பினை இரத்து செய்யப்படாமல் புதியதாக வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரர் திரு. D. செந்தில், திண்டிவனம் என்பவர் புதிய வரிவிதிப்பினை செலுத்தாமல் பழைய வரி விதிப்பினை செலுத்தி வருகிறார் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரரான திண்டிவனம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 152/2025/அ2, நாள் 12.02.2026–ல் மனுதாரரின் கட்டிடத்தின் மீதான புது வரிவிதிப்புகளில் வரிவிதிப்பு செய்யப்பட்ட அளவுகளின் விபரம், இருமுறை வரிவிதிப்பு விதிக்கப்பட்டது குறித்து விளக்கம் அளிக்காததால், கட்டிடத்தின் முன்னாள் உரிமையாளர் காலஞ்சென்ற திருமதி கஸ்தூரி என்பவரின் பெயரில் சொத்துவரி கேட்பு கோரப்பட்டதற்கான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் கடிதம் ந.க.எண். 382/ந/2025, நாள் 27.04.2026ன் வழி திண்டிவனம் நகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

9. அதன்படி திண்டிவனம் நகராட்சி ஆணையர், தனது கடிதம் ந.க.எண்.152/2025/அ2, நாள் 04.05.2026–ல் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''1) மனுதாரரின் தாயார் திருமதி. D.கஸ்தூரி பெயரில் வரி விதிப்பு எண்.043/019/900176 மற்றும் 043/019/900177 என்ற வரி விதிப்புகளில் ஒரு வணிக பயன்பாடாகவும் மற்றும் ஒரு குடியிருப்பாகவும் இரண்டு வரிகள் வருகிறது. இந்நிலையில் சொத்து வரி சீராய்வு நடைபெற்ற தருவாயில் 03.10.2017 அன்று இடத்தினை அளந்து திருமதி. D.கஸ்தூரி என்பவர் பெயரில் இரண்டு வரி விதிப்புகள் ஒரு வணிக பயன்பாடாகவும் மற்றும் ஒரு குடியிருப்பாகவும் வரி கேட்பு தொகையினை உயர்த்தி 043/019/900946 மற்றும் 043/019/900968 வரி விதிக்கப்பட்டுள்ளது.

2) ஆனால் மனுதாரராகிய திரு. D.செந்தில் புதியதாக விதிக்கப்பட்டுள்ள வரி தொகையினை செலுத்தாமல் தொடர்ந்து அலைக்கழித்து வரி செலுத்தாமல் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி வந்துள்ளார். இந்நிலையில், புதியதாக விதிக்கப்பட்டுள்ள சொத்துவரியினை மறைத்து பழைய வரி விதிப்பினை 043/019/900176 மற்றும் 043/019/900177னை திருமதி. D.கஸ்தூரி என்ற பெயரில் இருந்து திரு. D.செந்தில் பெயருக்கு 23.10.2021 மற்றும் 25.10.2021 அன்று பெயர் மாற்றம் செய்துள்ளார்.

3) சொத்துவரி சீராய்வில் விதிக்கப்பட்ட இரண்டு வரி விதிப்புகளும் கேட்பு தொகை அதிகம் என்பதால் மனுதாரர் அதனை மறைத்து குறைவாக வரி விதிப்பு செய்யப்பட்ட வரி விதிப்பு எண்.043/019/900176 மற்றும் வரி விதிப்பு எண்.043/019/900177 மட்டுமே பெயர் மாற்றம் செய்துள்ளார். சொத்துவரி சீராய்வில் புதியதாக கேட்பு எழுப்பப்பட்ட இரண்டு வரிவிதிப்புகளின் நிலுவைத் தொகையினை செலுத்தாமல் குறைவாக கேட்பு எழுப்பப்பட்ட பழைய வரி விதிப்பிற்கான தொகையினையே செலுத்தி வருகிறார்.

சொத்துவரி சீராய்வில் விதிக்கப்பட்ட புதிய வரிகளுடன் சேர்த்து நான்கு வரி விதிப்புகளும் அவருடையதுதான் எனவும், தொகையினை முழுமையாக செலுத்தி உரிய ஆவணங்கள் வழங்கி பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மனுதாரருக்கு பலமுறை தெரிவித்தும்

இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் நகராட்சியின் மீது தொடர்ந்து புகார் அளித்து வருகிறார் என்பதை மிக மிக கனிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.''

10. இந்நிலையில் மனுதாரரின் 12.02.2026 நாளிட்ட மற்றொரு புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.02.2026 அன்று பெறப்பட்டு 51/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" திண்டிவனம் நகராட்சியில் எனது கடைக்கு ஏற்கனவே அரையாண்டு வரியாக ரூ.1003/– செலுத்தி வந்தேன். தற்போது திடீரென 2025–26 அரையாண்டிற்கு வரி அளவு 520 சதுர அடிக்கு மட்டும் ரூ.14,987 வரி உயர்த்தப்பட்டுள்ளது.

இது மிகவும் அதிகம் என கருதுகிறேன். இதனால் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளேன். எனவே என்னுடைய வரி உயர்வை மறுபரிசீலனை செய்யும்படி வேண்டுகிறேன்.

New Tax No:043/019/900176
Old Tax No: 043/104008

நிதி ஆண்டு	காலதாமதக் கட்டணம் (Delay Penalty)	சொத்துவரி (Property Tax)	SUC	மொத்தம் (Total)
2024–25	288.00	14399.00	300.00	14987.00
2025–26	0.00	28798.00	600.00	29398.00
மொத்தம்	288.00	43197.00	900.00	44385.00

ஆகவே ஐயா அவர்கள் இம்மனுவை பரிசீலனை செய்து தக்க உத்திரவு எடுக்கும்படி பணிந்து இம்மனுவை சமர்ப்பிக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

11. மனுதாரரின் 12.02.2026 நாளிட்ட மனுமீதான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தின் 11.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் திண்டிவனம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

12. திண்டிவனம் நகராட்சி ஆணையரின் அறிக்கை கடிதம் ந.க. எண்.152/2025/அ2, நாள் 19.06.2026–ல் முறையீட்டு மனுதாரரின் 12.02.2026 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுக்கு கீழ்க்கண்டவாறு விவரங்களை தெரிவித்துள்ளார்.

புகார்தாரர் D.செந்தில் என்பவரின் இடத்தினை இந்நகராட்சி உதவி வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர் மற்றும் சம்மந்தமப்பட்ட வருவாய் உதவியாளர் ஆகியோரால் நேரடி ஆய்வு செய்யப்பட்டது.

கட்டிடத்தின் அளவுகள் விவரம்.

			வணிக பயன்பாடு
1)	தரைதளம் RCC	9 x 65 = 585 சதுர அடி	குடியிருப்பு
2)	முதல் தளம் RCC	9 x 65 = 585 சதுர அடி	குடியிருப்பு
3)	இரண்டாம் தளம் RCC	9 x 17 = 153 சதுர அடி	குடியிருப்பு
4)	இரண்டாம் தளம் (ACC)	9 x 12 = 108 சதுர அடி	
	ஆக மொத்தம்	1431 சதுர அடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது	

வரிவிதிப்பு எண்கள் விவரம்

வரிசை எண்.	வரி விதிப்பு எண்.	வரி விதிப்புதாரர் பெயர்	நிலுவைத் தொகை விவரம் (ரூபாய்)
			41714
1)	043/019/900968	திருமதி கஸ்தூரி	135329
2)	043/019/900946	திருமதி கஸ்தூரி	75007
3)	043/019/900176	திரு. D. செந்தில்	1744
4)	043/019/900177	திரு. D. செந்தில்	253794

திரு. D. செந்தில் என்பவருடைய கட்டிடத்தின் சொத்து வரி மொத்தம் 4 வரி விதிப்புகள் ஆகும். இவற்றில் தற்போது 043/019/900177 என்ற குறைவான கேட்பு உள்ள வரி செலுத்திவிட்டு மீதமுள்ள வரி விதிப்பு எண்களையும் செலுத்தாமல் நீண்ட நாட்களாக அரசியல் பிரமுகர்கள் மற்றும் பல முறை பல புகார்கள் அளித்துக் கொண்டே 2017 ஆம் ஆண்டு முதல் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி செலுத்தாமல் அலைகழித்து கொண்டு நிர்வாகத்திற்கு வேண்டுமென்றே இடையூறு செய்து கொண்டும் வருகிறார் என்பதை மிக மிக கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.". எனத் தெரிவித்துள்ளார்.

13. மனுதாரரின் புகார் குறித்து விசாரணை மேற்கொள்ள மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திண்டிவனம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 23.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.06.2026 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

14. மனுதாரர் 23.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"வரி எண்.900176 வணிக கடையின் அளவு 585 சதுர அடிக்கு அரையாண்டு வரியாக ரூ.1003/– செலுத்தி வந்தநிலையில் அரையாண்டுக்கு 14987/– வரியாக விதிக்கப்பட்டுள்ளது. இதனை முறைப்படுத்தி தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் வரி விதிப்பு எண். 900946 மற்றும் 900968 தொடர்ந்து 2017ம் ஆண்டு முதல் எனது தாயார் திருமதி.கஸ்தூரி பெயரிலேயே இருந்து வருகிறது. மேற்படி இரண்டு வரிவிதிப்புக்களையும் ரத்து செய்யும்படி நகராட்சிக்கு ஆணையிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது பெயரில் உள்ள வரி விதிப்பு எண். 900176 வணிக கடை வரியினை மறுபரிசீலனை செய்து நியாயமான வரி விதிப்பை திண்டிவனம் நகராட்சி வழங்கிட ஆவன செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."எனத் தெரிவித்துள்ளார்.

15. எதிர்மனுதாரரான திண்டிவனம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 152/2025/அ2, நாள் 19.06.2026–ல் 23.06.2026 அன்று அலுவலக பணிகள் மற்றும் மாவட்ட ஆட்சியரின் ஆய்வுக்கூட்டத்தில் கலந்துக் கொள்ள வேண்டியிருப்பதால் திண்டிவனம் நகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் திரு. கு. அசோகன் மற்றும் வருவாய் ஆய்வர் திரு. செ. ஹரிகிருஷ்ணன் ஆகியோர்களை 23.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராவார்கள் என தெரிவித்துக் கொண்டவாறு நகராட்சி உதவி வருவாய் அலுவலர் திரு. கு. அசோகன் மற்றும் வருவாய் ஆய்வர் திரு. செ. ஹரிகிருஷ்ணன் ஆகியோர் 23.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"176, 177, 946 மற்றும் 968 ஆகிய எண்களில் நான்கு வகையான வரிவிதிப்புகள் திண்டிவனம் நகராட்சியால் விதிக்கப்பட்டு மனுதாரருக்கு வரிகேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. தரைத்தளத்திற்கு 585 சதுர அடிக்கும், முதல் தளத்திற்கு 585 சதுர அடிக்கும் மற்றும் இரண்டாம் தளத்திற்கு residential 153 சதுர அடி மற்றும் commercial 108 சதுர அடி ஆக மொத்தம் 1431 சதுர அடிக்கு வரி நிர்யணம் செய்யப்பட்டுள்ளது.

946 மற்றும் 968 ஆகிய வரி விதிப்பு எண்கள் மனுதாரரின் தாயாரின் பெயரில் 2017ல் மறு சீராய்வுக்கு பின் விதிக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரரின் பெயரில் 176, 177 என்ற எண்களில் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மனுதாரருக்கு சரியான முறையில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு எண்.900968க்கு 2017–18 முதல் 2026–2027 வரை ரூ.41,312/–, 900946 2017–18 முதல் 2026–27 வரை ரூ.1,33,720/–, 900176க்கு 2024–25 முதல் 2026–27 வரை ரூ. 73,495/– மற்றும் 900177க்கு 2026–27க்கு ரூ.1744/– வரி நிலுவையாக நீண்ட நாட்களாக மனுதாரரால் செலுத்தப்படாமல் உள்ளது என்பதையும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறோம்.".

16. மனுதாரரின் புகார் மனுக்கள், வாக்குமூலங்கள் மற்றும் எதிர்மனுதாரரான திண்டிவனம் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், ஆணையர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான நகராட்சி அலுவலக மேலாளரின் வாக்குமூலம், உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரரின் தாயாரின் பெயரில் இருந்த கடை மற்றும் வீடு அமைந்துள்ள சொத்திற்கு சொத்துவரி 2020 வரை செலுத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சொத்து தானசெட்டில்மெண்ட் மூலம் மனுதாரரின் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், 25.10.2021 மற்றும் 23.11.2021 நாளிட்ட நகராட்சி செயல்முறைகள் மூலம் சொத்துவரி எண். 043/019/00176 மற்றும் சொத்துவரி எண். 043/019/00177 மனுதாரரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் தாயார் 30.09.2021ல் இறந்துள்ள நிலையில் அவரது பெயரில் உள்ள சொத்து வரி விதிப்பு எண். 043/019/900946 (ப.எண். 043/013/00658) மற்றும் வரிவிதிப்பு எண்.043/019/900968 (ப.எண். 043/013/00657) நிலுவையாக உள்ள இரு சொத்துவரிகளை ரத்து செய்ய கேட்டுக்கொண்டுள்ளார் என்பதும், ஜப்தி அறிவிப்புகளை ரத்து செய்ய வேண்டும் என்பதும், ஜப்தி அறிவிப்பில் உள்ள வரிவிதிப்பு எண்களும், மனுதாரரின் பெயரில் உள்ள வரிவிதிப்பு எண்களும் ஒரு சொத்து, ஒரு கதவு எண்ணிற்கானது என்பதும், மனுதாரரின் பெயரில் உள்ள சொத்து வரி விதிப்பு எண். 043/013/00176 (பழைய வரி விதிப்பு எண்.043/10408) 2025–26 ஆம் ஆண்டிற்கான சொத்துவரி உயர்வை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதும் மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் மற்றும் வாக்குமூலங்களிலிருந்து அறியவருகிறது.

மனுதாரரின் தாயார் திருமதி D. கஸ்தூரி என்பவர் பெயரில் இரு விதிப்பு எண்களில் ஒன்று வணிக பயன்பாடாகவும், மற்றொன்று குடியிருப்பாகவும் இருந்தது என்பதும், தொடர்ந்து சொத்துவரி சீராய்வின் போது திருமதி D. கஸ்தூரி என்பவர் பெயரில் இரு வரி விதிப்பு எண்கள் விதிக்கப்பட்டுள்ளது என்பதும், அவற்றில் ஒன்று வணிக பயன்பாடாகவும், மற்றொன்று குடியிருப்பாகவும் விதிக்கப்பட்டுள்ளது என்பதும், இதனால் திருமதி கஸ்தூரி என்பவர் பெயரில் மொத்தமாக நான்கு சொத்துவரிகள் விதிக்கப்பட்டுள்ளது என்பதும், இதனில் சொத்துவரி உயர்வின் போது விதிக்கப்பட்ட இரு கேட்புகளின் தொகை அதிகம் என்பதால், குறைவாக இருந்த இரு வரிவிதிப்பு எண்களை கொண்டு மனுதாரர் தனது பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்துள்ளார் என்பதும், சொத்துவரி சீராய்வின் போது திருமதி.D.கஸ்தூரி என்பவர் பெயரில் கூடுதலாக இரு வரிவிதிப்பு எண்கள் விதிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சொத்துவரி நிலுவை தொகையினை வசூலிக்க ஜப்தி அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்பதும், புதியதாக எழுப்பப்பட்ட இரண்டு வரிவிதிப்பு எண்களையும் சேர்த்து நான்கு வரிவிதிப்பு எண்களும் மனுதாரருடையது என்பதால் தொகையினை முழுமையாக செலுத்தி உரிய ஆவணங்கள் வழங்கி பெயர் மாற்றம் செய்து கொள்ள மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் திண்டிவனம் நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் மற்றும் நகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலங்களிலிருந்து அறியமுடிகிறது.

17. இந்நேர்வில், திருமதி. கஸ்தூரி பெயரில் ஏற்கனவே இரு சொத்துவரி விதிப்பு எண்கள் தோற்றுவிக்கப்பட்ட நிலையில், சொத்துவரி சீராய்வின் போது மேலும் இரு வரி விதிப்பு எண்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் திண்டிவனம் நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் மற்றும் நகராட்சி உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலங்களிலிருந்து தெரியவருவதால், மனுதாரரின் சொத்து வரி விதிப்பு குறித்து மனுதாரரின் முன்னிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் தல ஆய்வு மேற்கொண்டு, அவ்வாய்வறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள திண்டிவனம்

நகராட்சி ஆணையரை அறிவுறுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள் 24 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

1) திரு. D.செந்தில்
எண்.126 A, நேருவீதி,
திண்டிவனம்,
விழுப்புரம் மாவட்டம்.
2) நகராட்சி ஆணையர்,
திண்டிவனம் நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர் மண்டலம், வேலூர் மாவட்டம்.
4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

30/7/26
செயலாளர்.